# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 176/2024 நாள்.25.9.25

PW1- திரு மதி. தனலெட்சுமி, க /பெ. திரு. நடேசன்

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் கணவர் இரயில்வேயில் வேலை பார்த்து ஒய்வு பெற்றார் என்றால் ஆமாம். என் மகன் கணபதி சாலை விபத்தில் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதி என் மருமகள், 2, 3 பிரதிவாதிகள் என் பேத்திகள் என்றால் ஆமாம். என் மகன் இறந்தது 2014 என்றால் ஆமாம். என் மகன் வெளிநாட்டில் இறந்து 1மாதம் கழித்து பிறகு இந்தியாவிற்கு வந்தது என்றால் ஆமாம். அ.வ.எண் 104/2014 வழக்கை நான் இதே பிரதிவாதிகளுக்கு எதிராக பாகம் கேட்டு போட்டிருந்தேன் என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் அ.வ எண் 104/2014 பிராது நகல் என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அந்த வழக்கு 20.1.2015 இல் தள்ளுபடியாகிவிட்டது என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கபடும் அ.வ எண் 104/2014 தீர்ப்பாணை நகல் என்றால் ஆமாம். அது **பி.வா.சா.ஆ.2** ஆகும். அந்த வழக்கில் தாவா சொத்துகளின் ஆவணங்களின் நகல் ஜெராக்ஸ் நகல் தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். வழக்கின் அசல் ஆவணங்கள் எங்கு உள்ளது என்றால் ஒரு பத்திரம் மருமகளிடமும், மற்ற பத்திரங்கள் என்னிடமும் என் கணவரிடமும் உள்ளது. என் மகன் உடல் இந்தியாவிற்கு வந்து அடக்கம் ஆன உடன் என் மருமகள் புகார் கொடுத்தது என்றால் ஆமாம். அன்று முதல் என் மருமகள் என் பேத்திகள் எல்லாம் தனியாகவும் நான் தனியாகவும் வசிக்கிறேன் என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதி புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யபட்டு என் மகள் விஜயலெட்சுமி கைது செய்யபட்டார் என்றும், நாங்கள் முன்ஜாமீன் வாங்கினோம் என்றால் ஆமாம். உயர்நீதிமன்றத்தில் சமரச மைத்திற்கு வழக்கு அனுப்பட்டது என்றும் அதற்கு நாங்கள் முன்னிலையாகவில்லை என்றால் சாட்சி எதுவும் சொல்லவில்லை. கிரிமினல் வழக்கில் என் மருமகள் எங்களுக்கு எதிராக சாட்சி சொன்னார் என்றால் ஆமாம். அந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று நாங்கள் விடுவிக்கபட்டோம் என்றால் ஆமாம். சொத்தின் பத்திரங்கள் மற்றும் நகைகள் எல்லாம் நானும், என் குடும்பத்ினரும் வைத்து கொண்டு நாங்கள் பிரதிவாதிகளை

விரட்டிவிட்டதாக வழக்கு என்றால் சரியல்ல. நகைகளை நானும் மற்றவர்களும் பீரோவை உடைத்து எடுத்து கொண்டோம் என்பதுான் வழக்கு என்றால் சரியல்ல. போலிஸ் வழக்கிற்கு பிறகு சமரசம் பேசினோமா என்றால் இல்லை உயர்நீதிமன்றத்திற்குதான் போனோம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் என்னுடைய கையெழுத்து வா.சா.ஆ.21 எங்கு வைத்து கையெழுத்து போடபட்டது என்றால் உழவர் சந்தையில் வைத்து 1ஆம் பிரதிவாதி அவருடைய அண்ணன், அப்பா வந்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணம் வா.சா.ஆ 20 நானும் 1ஆம் பிரதிவாதியும் சமாதானம் பேசி எழுதி கையெழுத்து போட்ட ஒன்று என்றால் ஆமாம். பாக வழக்கை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் விட்டபிறகு வா.சா.ஆ.20, 21 ஏற்பட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ.20 படி நடந்துகொள்ள தயாராக இருக்கிறேன் என்றால் ஆமாம். என் வங்கி கணக்கிற்கு வெளிநாட்டிலிருந்து மகன் இறந்ததற்காக பணம் வந்ததா என்றால் 3,95,000 வந்தது. பணம் வந்த விபரம் என் மருமகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். அதுசொல்லிதான் ஏற்படானது. இந்த பிராதில் ரூபாய் ஒரு கோடி கணக்கிற்கு வந்ததாக சொல்லியுள்ளேனே அதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எவ்வளவு பணம் வந்ததாக 1ஆம் பிரதிவாதி என்னிடம் சொன்னார் என்றால் 57 லட்சத்து சில்லறை வந்ததாக சொன்னது. என் மகனுக்கு பூர்விகசொத்து உண்டா என்றால் இல்லை. நானும் என் கணவரும் தனிகுடும்பம் என்றால் ஆமாம். நான் ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாவா சொத்துகளில் பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தின் அடிப்படையில் உள்ள சொத்துக்களை பெற்றுகொள்ள தயாராக இருக்கிறேனா என்றால் உள்ளேன். விபத்தில் இழப்பு தொகை என்பது பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்கு வழங்கபட்டது என்றும் அதில் பங்கு கோரமுடியாது என்றால் சரியல்ல. எனக்குரிய தொகையை அந்த நிறுவனம் கணக்கீட்டு என்னுடைய கணக்கிற்கு அனுப்பிவிட்டது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.